உ
சிவமயம்
இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட




திருமதி. தம்பிஐயா செல்லம்மா அவர்களின்
மறைவு குறித்த

# நினைவிதழ்

27-09-2003

உ
சிவமயம்




இணுவில் மேற்கு

திருமதி. தம்பிஐயா செல்லம்மா அவர்களின்

மறைவு குறித்த

# நினைவிதழ்
27-09-2003



அமரர்

## திருமதி. தம்பிஐயா செல்லம்மா

அவர்கள்

### திதிநிர்ணயம்

ஆண்டு சுபானு மாதம் ஆவணித்திங்கள்
பூ ண்ட பூ ர்வபட்ச பிரதமையில் - மீண்டுலகில்
வாரா வழிதேடி வல்லாள் செல்லம்மா
சீராகச் சேர்ந்தாள் முருகன்தாள்.

# சமர்ப்பணம்

தாய்க்குரிய கடமைகளில் இருந்து சிறிதும்
தவறாமல் எம்மையெல்லாம் - இந்த
நிலைக்கு உயரவைத்து தரணியில்
தலை நிமிர வாழவைத்து
முருகன் திருவடி இணைந்த
எமது அன்புத் தாயாருக்கும்

நன் மக்களை பெற்று எமக்கு
ஈந்து எம்மை இன்பமாக
வாழவைத்த எமது மாமியாருக்கும்
அன்புக்கரம் நீட்டி எம்மை
ஆதரித்த அப்பம்மாவிற்கும்
இன்புற எமைஅணைத்து
அன்பான அம்மம்மாவிற்கும்
இம்மலரைச் சமர்பிக்கின்றோம்

**மக்கள் மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

## பஞ்ச தோத்திரம்



### தேவாரம்

**திருச்சிற்றம்பலம்.**

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

**திருச்சிற்றம்பலம்.**

### திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேனார்க் கொடுத்துரைக்கே
னாண்ட நீயருளிலையதனால்
வார் கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே



### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கேயுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெலிவளர் பளிங்கின் திரண் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள நுள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சயகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோருக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்து
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ்
இருக்க வென்றார்.

## வாழ்த்து

பாதி மதிநதி போது மணி சடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுரு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறை வோனே
சூர னுடலற வாரிசுவறிட
வேலை விடவல பெருமாளே

## திருப்புகழ்

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்"**

- திருக்குறள் -



## சரஸ்வதி தோத்திரம்

வெண்டாமரைக் கன்றி நின் பதந்தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ சகமேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலா வல்லியே. (1)

நாடும்பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணித்தருள்வாய் பங்கயாசனத்திற்
கூடும் புசும் பொற்கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடும் கமக்கும் கரும்பே சகலகலா வல்லியே. (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ வுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாபமயிலே சகலகலா வல்லியே. (3)

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய் வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந் தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலா வல்லியே. (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நேஞ்சத் தடத்தலராததென் னேநெடுந் தாட் கமலந்து
ஆஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
குஞ்சத்தவி சொத்திருந்தாய் சகலகலா வல்லியே. (5)

பண்ணும் பரதமுங் கல்வியந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே (6)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ மதிப்பேடே சகலகலா வல்லியே. (7)

சொல்லிற் பணமு மவுதான முங்கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளினாசனம் சேர் செல்விக்கு அரிதென்று ஒருகால
முஞ்சிதையாமை நல்குங் கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலா வல்லியே. (8)

சொற்கும் பொருட்ச முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடர்கன்ன நான நடை
கற்கும் பதாம் புவத்தாளே சகலகலா வல்லியே. (9)

மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும் விளம்பிலுள்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலா வல்லியே. (10)



## விநாயக கவசம்

(01) வளர்ச்சிகையைப் பாபரமால் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியாக
சிபர்காக்கப் புருவந தம்மைத்
தளர்விமைகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க

(02) கவின்வளரு மதரசங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சீபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநர யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநர
சியைச்சிந்தி தார்த்தர் காக்க

(03) காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க

(04) பக்கமிரண் டையுந்தரா தராகாக்க
பிருட்டத்தைப் பாவ நீங்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காகக
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்கண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க

(05) தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிராசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தகர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க

(06) அக்கனியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவாத் தனமேற் கென்னுந்
திங்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிலக்கி
லீசநந் தனரே காக்க

(07) ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
காதபூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்சாம் விரைந்து காக்க

(08) மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான் தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞானறும் விரும்பிக் காக்க

(09) வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா விடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ சோதி னாலு
மன்றவாங் கவாதேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்

tpehaf ftrk; Kw;wpw;W.

## இணுவில் மேற்கை சேர்ந்த அமரர் தம்பிஜயா செல்லம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு.

இலங்கைத் தீவின் வடபால் விளங்கும் பொன் சேர் யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த சைவவமும் செந்தமிழும் சிறந்து விளங்க கலைத்துறையும், வணிகத்துறையும் செழிப்புற ஓங்கும் இணுவை ஊரில் சிறப்போடு வாழ்ந்த சரவணமுத்து லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பிள்ளைகளாக சின்னம்மா, ஆறுப்பிள்ளை, தம்பிஜயா, செல்லம்மா என்போரை பெற்றெடுத்தனர்.

இதில் அமரரான செல்லம்மா சகோதர பாசத்தோடு அன்பு, பணிவு, அடக்கம் என பெண்களின் பண்புகளில் சிறந்தவராக வளர்ந்து தனது இளமைக் கல்வியை இணுவில் அமெரிக்கமிசன் தமிழ்கலைவன் பாடசாலையிலும் பின் யாழ்/ இராமநாதன் கல்லூரியிலும் பயின்றார். இவர் இணுவில் செகராஜ சேகரப் பிள்ளையார், பரமானந்த வல்லிஅம்மன், நொச்சியொல்லைக் கந்தன், தீரா நோய் தீர்க்கவல்ல திருமருந்தாக விளங்குகின்ற தீர்த்தத்தை தன்னகத்தே கொண்ட சாத்தியடி வயிரவரையும் தன்னுடைய குலதெய்வமாக நித்திய வழிபாடு செய்து வந்தார். மணப்பருவம் அடைந்ததும் இவரை இணுவை பதியில் வசிக்கும் பொன்னம்பலம் சின்னம்மா தம்பதிகள் பெற்றெடுத்த பிள்ளைகளில் தம்பிஜயா, தெய்வானைப்பிள்ளை, நடராசா, கனகரத்தினம் ஆகியோர்களில் மூத்த புதல்வனாகிய தம்பிஜயாவை பெரியோர்கள் நிச்சயித்தபடி திருமணம் செய்து கொண்டார். இதன் பின் இவர்களுடைய சிறந்த இல்லறத்தின் பேறாக சிறந்த ஆறுபிள்ளைகளை பெற்றெடுத்தனர்.



மூத்தபுதல்வராக கந்தசாமி என்பவரை சான்றோனாக்கி கூட்டுறவு உதவி ஆனையாளராக தற்போது கிளிநொச்சியில் பணியாற்றுகின்றார். அவர் கோண்டாவில் கிழக்கை சேர்ந்த சரவணமுத்து தவஅருட்கரசி என்னும் மங்கையை மணந்து இல்லறத்தில் புகுந்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்..

அடுத்தமகன் முருகையா, இவர் கல்வி கற்று தற்போது எழுதுவிளைஞராக பணியாற்றி வருகிறார். (உடுவில் பிரதேச செயலகம்) இவர் இணுவில் கிழக்கை சேர்ந்த ஆறுமுகதாஸ் சந்திராதேவியை திருமணம் செய்து அம்சனா, அருட்குமரன், தணிகைக்குமரன் ஆகிய புதல்வர்களை பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்..

அடுத்து பரமேஸ்வரன், இவர் தந்தை ஆரம்பித்து கொடுத்த பரமேஸ்வரன் "ஸ்ரோஸ்" எனும் வணிகநிலையத்தை நடாத்திவரும் வேளை கோண்டாவில் கிழக்கு சதாசிவம் தயாநிதியை திருமணம் புரிந்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்ததாக இவர்களுடன் மூத்த புதல்வி மகாலட்சுமி, வடலியடைப்பை சேர்ந்த கிருபைநாதன் (நில அளவைப்பகுதி) என்பவரை துணைவராக ஏற்றுக் கொண்டு தமது இல்லறவாழ்வில் அஜந்தன், ஜெனனி, யோகிதா, யசிந்தா, உமாகரன், நிரேகா, அரவிந்தன், தர்சிகா, துளசிகா ஆகிய புதல்வர்களை பெற்றெடுத்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்..

அடுத்து கனகலட்சுமி, இவர் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த குணநேசன் எனும் வர்த்தகரைத் திருமணம் செய்து தமது இல்லற வாழ்வில் அனோஜன், கேதீசன், கோசலா ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்து நிர்மலாதேவி, இவர் இணுவிலைச் சேர்ந்த கிருபானந்தன் எனும் வர்த்தகரை (K.R.M அரிசி ஆலை) திருமணம் செய்து இல்லறத்தின் பேறாக திவ்வியா, லோசன், பவித்தா எனும் பிள்ளைகளை பெற்றெடுத்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தனை சிறப்புக்கும் வழிவகுத்து அன்பின் உருவமாய் ஆற்றலின் உறைவிடமாய் சிறந்த தாரமாய் தாயாய் வாழ்ந்து ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தம் மக்களை சான்றோர் எனக்கேட்டு மகிழ்ந்து சிறப்புற்று வாழ்ந்து 28/08/2003 அன்றுசெகராச சேகரப் பிள்ளையார் அபயக்கரம் காட்ட இணுவைக்கந்தன் திருவடியடைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்.

அன்னாரின் ஆத்த சாந்திக்காகவும் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் அவரைப்பிரிந்து கலங்கி நிற்கும் அவரது குடும்பத்தாரின் மனச்சாந்திக்காகவும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி



## வெற்றியின் ரகசியம்

- ❖ அன்புகாட்டு - ஆனால் அடிமையாகி விடாதே!
- ❖ இரக்கங்காட்டு - ஆனால் ஏமாந்து போகாதே!
- ❖ பணிவாய் இரு - ஆனால் கோழையாய் இராதே!
- ❖ கண்டிப்பாய் இரு - ஆனால் கோபப்படாதே!
- ❖ சிக்கனமாய் இரு - ஆனால் கஞ்சனாய் இராதே!
- ❖ வீரனாய் இரு - ஆனால் போக்கிரியாய் இராதே!
- ❖ சுறுசுறுப்பாய் இரு - ஆனால் பதட்டப்படாதே!
- ❖ தர்மம் செய் - ஆனால் ஆண்டியாகி விடாதே!
- ❖ பொருளைத்தேடு - ஆனால் கடவுளை மறந்து விடாதே!

## நற்சிந்தனைகள்

- ❖ நல்லதை நினை : நல்லதைப் பேசு : நல்லதைச் செய் : அழியாத ஆனந்த உலகத்தை நீ சீக்கிரம் அடைவாய்.
- ❖ தனக்கு எதைச் செய்து கொள்ள விரும்பமாட்டோமோ அதைப் பிறருக்குச் செய்யாமலிருப்பதே தர்மத்தின் சாரமாகும்.
- ❖ பத்தி இறைவனை அடையச் துயரமற்ற குறுக்குவழி

- சிவானந்தசுவாமிகள் -

## நன்றி நவிலல்



தம்பிஐயா செல்லம்மா அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு ஓடிவந்து எமக்கு அனுதாபம் கூறியவர்களுக்கும் மற்றும் கடிதம், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தோர்க்கும் மேலும் சகலவழிகளில் உதவிபுரிந்தோர்க்கும் மனம் நிறைந்த நன்றிகளை கூறுகின்றோம்.



**மக்கள், மருமக்கள்**

**பேரப்பிள்ளைகள்.**

"லக்ஷ்சுமி வாசம்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

# MULTIPLICATION TABLE
# வாய்ப்பாடு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 x 1 | 1 x 2 | 1 x 3 | 1 x 4 | 1 x 5 | 1 x 6 | 1 x 7 | 1 x 8 | 1 x 9 |
| 2 x 2 | 2 x 4 | 2 x 6 | 2 x 8 | 2 x 10 | 2 x 12 | 2 x 14 | 2 x 16 | 2 x 18 |
| 3 x 3 | 3 x 6 | 3 x 9 | 3 x 12 | 3 x 15 | 3 x 18 | 3 x 21 | 3 x 24 | 3 x 27 |
| 4 x 4 | 4 x 8 | 4 x 12 | 4 x 16 | 4 x 20 | 4 x 24 | 4 x 28 | 4 x 32 | 4 x 36 |
| 5 x 5 | 5 x 10 | 5 x 15 | 5 x 20 | 5 x 25 | 5 x 30 | 5 x 35 | 5 x 40 | 5 x 45 |
| 6 x 6 | 6 x 12 | 6 x 18 | 6 x 24 | 6 x 30 | 6 x 36 | 6 x 42 | 6 x 48 | 6 x 54 |
| 7 x 7 | 7 x 14 | 7 x 21 | 7 x 28 | 7 x 35 | 7 x 42 | 7 x 49 | 7 x 56 | 7 x 63 |
| 8 x 8 | 8 x 16 | 8 x 24 | 8 x 32 | 8 x 40 | 8 x 48 | 8 x 56 | 8 x 64 | 8 x 72 |
| 9 x 9 | 9 x 18 | 9 x 27 | 9 x 36 | 9 x 45 | 9 x 54 | 9 x 63 | 9 x 72 | 9 x 81 |
| 10 x 10 | 10 x 20 | 10 x 30 | 10 x 40 | 10 x 50 | 10 x 60 | 10 x 70 | 10 x 80 | 10 x 90 |
| 11 x 11 | 11 x 22 | 11 x 33 | 11 x 44 | 11 x 55 | 11 x 66 | 11 x 77 | 11 x 88 | 11 x 99 |
| 12 x 12 | 12 x 24 | 12 x 36 | 12 x 48 | 12 x 60 | 12 x 72 | 12 x 84 | 12 x 96 | 12 x 108 |
| 13 x 13 | 13 x 26 | 13 x 39 | 13 x 52 | 13 x 65 | 13 x 78 | 13 x 91 | 13 x 104 | 13 x 117 |
| 14 x 14 | 14 x 28 | 14 x 42 | 14 x 56 | 14 x 70 | 14 x 84 | 14 x 98 | 14 x 112 | 14 x 126 |
| 15 x 15 | 15 x 30 | 15 x 45 | 15 x 60 | 15 x 75 | 15 x 90 | 15 x 105 | 15 x 120 | 15 x 135 |
| 16 x 16 | 16 x 32 | 16 x 48 | 16 x 64 | 16 x 80 | 16 x 96 | 16 x 112 | 16 x 128 | 16 x 144 |

| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 x 10 | 1 x 11 | 1 x 12 | 1 x 13 | 1 x 14 | 1 x 15 | 1 x 16 | 1 x 17 | 1 x 18 |
| 2 x 20 | 2 x 22 | 2 x 24 | 2 x 26 | 2 x 28 | 2 x 30 | 2 x 32 | 2 x 34 | 2 x 36 |
| 3 x 30 | 3 x 33 | 3 x 36 | 3 x 39 | 3 x 42 | 3 x 45 | 3 x 48 | 3 x 51 | 3 x 54 |
| 4 x 40 | 4 x 44 | 4 x 48 | 4 x 52 | 4 x 56 | 4 x 60 | 4 x 64 | 4 x 68 | 4 x 72 |
| 5 x 50 | 5 x 55 | 5 x 60 | 5 x 65 | 5 x 70 | 5 x 75 | 5 x 80 | 5 x 85 | 5 x 90 |
| 6 x 60 | 6 x 66 | 6 x 72 | 6 x 78 | 6 x 84 | 6 x 90 | 6 x 96 | 6 x 102 | 6 x 108 |
| 7 x 70 | 7 x 77 | 7 x 84 | 7 x 91 | 7 x 98 | 7 x 105 | 7 x 112 | 7 x 119 | 7 x 126 |
| 8 x 80 | 8 x 88 | 8 x 96 | 8 x 104 | 8 x 112 | 8 x 120 | 8 x 128 | 8 x 136 | 8 x 144 |
| 9 x 90 | 9 x 99 | 9 x 108 | 9 x 117 | 9 x 126 | 9 x 135 | 9 x 144 | 9 x 153 | 9 x 162 |
| 10 x 100 | 10 x 110 | 10 x 120 | 10 x 130 | 10 x 140 | 10 x 150 | 10 x 160 | 10 x 170 | 10 x 180 |
| 11 x 110 | 11 x 121 | 11 x 132 | 11 x 143 | 11 x 154 | 11 x 165 | 11 x 176 | 11 x 187 | 11 x 198 |
| 12 x 120 | 12 x 132 | 12 x 144 | 12 x 156 | 12 x 168 | 12 x 180 | 12 x 192 | 12 x 204 | 12 x 216 |
| 13 x 130 | 13 x 143 | 13 x 156 | 13 x 169 | 13 x 182 | 13 x 195 | 13 x 208 | 13 x 221 | 13 x 234 |
| 14 x 140 | 14 x 154 | 14 x 168 | 14 x 182 | 14 x 196 | 14 x 210 | 14 x 224 | 14 x 238 | 14 x 252 |
| 15 x 150 | 15 x 165 | 15 x 180 | 15 x 195 | 15 x 210 | 15 x 225 | 15 x 240 | 15 x 255 | 15 x 270 |
| 16 x 160 | 16 x 176 | 16 x 192 | 16 x 208 | 16 x 224 | 16 x 240 | 16 x 256 | 16 x 272 | 16 x 288 |

*Virus Inuvil.*